2007 ஏப்ரல் 4]

யுக்திகளையும் புகுத்துவதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலித்து, ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நூலகங்கள் அமைப்பதற்கு நூலக ஆணைக் குழுவினுடைய நிபந்தனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இன்றைக்குப் புத்தகத் திருவிழா, நிரந்தரப் புத்தகக் கண்காட்சி போன்ற நடவடிக்கைகள் கூடுதலாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, நிபந்தனைகளில், 5 சென்ட் நிலம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்திலே 5 சென்ட் நிலம் என்பது இப்போது அரிதாக இருக்கக் கூடிய சூழ்நிலையில், 1,000 சதுர அடி நிலம் கிடைத்தால், அதிலே விதிகளைத் தளர்த்தி நூலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் துவக்குவதற்குச் சொந்தக் கட்டடம் முதலிலே அமைப்பதற்கு இடம் இல்லாவிட்டாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய இத்தகைய ஆர்வலர்கள் ஒன்றாக இணைந்து, முதற்கட்டமாக வாடகை இல்லாமல் ஒரு கட்டடத்தைத் தருவார்களேயானால், உடனடியாக அந்த நூலகங்களைத் துவக்குவதற்கு நம்மால் ஆவன செய்ய முடியும்.

அடுத்தபடியாக, அவர்கள் இப்போது விதித்து இருக்கக்கூடிய அந்த 5 சென்ட் இடம் என்பது, சென்னைபோன்ற பெருநகரங்களிலே அதிகபட்சமான நில அளவையாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகள், பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிகளை அமைக்கக்கூடிய சூழ்நிலையிலேகூட அரசுக்கு இத்தகைய கருத்துருக்கள் வரப்பெற்று இருக்கும்போது, அரசு அவற்றை ஆய்வு செய்த முன்னுதாரணங்கள் இருக்கின்றன. எனவே, வருங்காலங்களிலே அதைக் குறித்து அரசு ஆய்வு செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 4

16—

கட்டட வசதி

***14712—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் நடவடிக்கையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் உள்ள நகர வணிக வரித் துறை அலுவலகம் கடந்த பல ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இக்கட்டடத்திலே போதுமான இட வசதி இல்லாமல் இருப்பதை அறிந்து, கடந்த காலத்திலே அரசு இடத்தைத் தேர்வு செய்து, திட்ட மதிப்பீடும் 40 இலட்சம் ரூபாயிலே தயார் செய்யப்பட்ட நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே அதற்குப் புதிய கட்டடத்தைக் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, அந்த வணிக வரித் துறையிலே பணியாற்றுகின்ற வணிக வரித் துறை அலுவலர், இன்று பொறுப்பு அலுவலராக ஓராண்டு காலமாகப் பணிபுரிந்து வருகிறார். அதிலே கூடுதலாக இருக்கின்ற A.C.T.O.—உதவி வணிக வரி அலுவலர் பணியிடம் காலியாக இருக்கிறது. ஆகவே, அந்த இடங்களையெல்லாம் பூர்த்தி செய்து, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் வளாகத்திலே 1,416.5 சதுர மீட்டர் பரப்பில், மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலகம் கட்ட, கோவை மாவட்ட ஆட்சியர் 26–3–2000 அன்று அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட நிலம் வணிக வரித் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டு, 10–5–2000 அன்று மேட்டுப்பாளையம் வட்டாட்சியரால், மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த இடத்தில் வணிக வரி அலுவலகம் கட்ட மேட்டுப்பாளையம் செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து திருத்திய மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. அவரிடமிருந்து திருத்திய மதிப்பீடு வரப்பெற்றவுடன், இப்பணியினை 2008–2009, பகுதி–2 திட்டத்தின்கீழ் சேர்த்து, மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அலுவலர்கள் பணியிடங்கள் பற்றிய குறிப்புகளைக் கேட்டார்கள். அது பற்றித் தனிக் கேள்வி போட்டால், அதற்கு விவரம் அளிக்க முன்வருகிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: காலியாக இருக்கின்ற அந்தப் பணியிடங்களில் உடனடியாகப் பணியமர்த்தி, தொடர்ந்து பொறுப்பிலே இருக்கின்ற அந்த வணிக வரித் துறை அலுவலர்களை விடுவித்து, நிரந்தரப் பொறுப்பு வகிக்கிற அலுவலர்களைப் போட வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்தி, அதை விரைவிலே செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: முன்னாலேயே தனிக் கேள்வி போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால், அதற்குரிய விவரங்கள் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.